DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 326/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | ஹரிதா | Age | : | 24 |
| H/N | : | கோபிநாத் | Occupation | : | இல்லத்தரசி |
| Village | : | மகாசக்திநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24th day of October 2024.

**24.10.2024**

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜராகவில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

**1.** நான் இராமநாதபுரம் மாவட்டம் மகாசக்திநகரில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக வசித்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். 2வது எதிரி சத்ரியன் என்பவரை தெரியும். எதிரிகள் இருவரையும் கிராமிய படம் என்ற யூட்யூப் சேனல் மூலம் தெரியும். கடந்த 05.10.2023–ம் தேதி எதிரிகள் இருவரும் மாலை 05.00 மணியளவில் என் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் பேசிவிட்டு பிறகு பாத்ரூம் சென்றிருந்தேன். திரும்பி வந்து பார்த்தபோது எதிரிகள் இருவரும் அங்கு இல்லை. நான் உடனே எனது ரூமில் உள்ள பீரோவை பார்த்தபோது பீரோ திறந்துகிடந்தது. அதில் நான் வைத்திருந்த 4 பவுன் தாலி செயின், 1 ¼ பவுன் சிறிய செயின், 1 ¼ பவுன் மோதிரம், 1 பவுன் கை செயின் ஆகமொத்தம் 7 ½ பவுன் தங்க நகைகள் காணவில்லை.

**2.** உடனே நான் எனது கணவருக்கும், மாமா சரவணன், சித்தப்பா மாணிக்கம், தம்பி ஹரிபிரபு ஆகியோர்களுக்கு தகவல் சொன்னேன். பிறகு பெரியவர்கள் மூலம் எதிரிகளிடம் பேசி பார்த்த போது அவர்கள் நகையை கொடுக்கவில்லை. பின்னர் சுமார் 3 நாட்கள் கழித்து நாங்கள் கேணிக்கரை காவல்நிலையம் சென்று புகார்மனு கொடுத்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார்மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பின்னர் நீண்ட நாட்கள் கழித்து நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது நகைகளை திரும்ப பெற்றுசென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**<u>மறுவிசாரணை– இல்லை</u>**

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No. 326/2024**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | கோபிநாத் | Age | : | 32 |
| F/N | : | கிருஷ்ணன் | Occupation | : | டிரைவர் |
| Village | : | மகாசக்திநகர் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 24th day of October 2024.

**24.10.2024**

**(1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜராகவில்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மகாசக்திநகரில் குடியிருந்து கொண்டு டிரைவராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். 2வது எதிரி சத்ரியன் என்பவரை தெரியும். கிராமிய படம் என்ற யூட்யூப் சேனல் மூலம் இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 05.10.2023-ம் தேதி மாலை 05.00 மணியளவில் நான் வேலைக்கு சென்றிருந்த போது எனது மனைவியான அ.சா.1 எனக்கு போன் செய்து எதிரிகள் இருவரும் வீட்டிற்கு வந்திருந்ததாகவும் அப்போது அ.சா.1 பாத்ரூம் சென்றுவிட்டு திரும்பி வந்து பார்த்தபோது எதிரிகளை காணவில்லை என்றும் உடனே ரூமிற்கு சென்று பார்த்த போது பீரோவில் இருந்த 4 பவுன் தங்க தாலி செயின், 1 ¼ பவுன் சிறிய செயின், 1 ¼ பவுன் கை செயின், 1 பவுன் மோதிரம் ஆகிய தங்க நகைகள் காணவில்லை என்று தகவல் சொன்னார். உடனே எனது சித்தப்பா சரவணன், மாமனார் மாணிக்கம் ஆகியோர்களுக்கு தகவல் சொன்னேன். பிறகு எதிரிகளை தொலைபேசியில் அழைத்த போது அவர்கள் எடுக்கவில்லை. 10 நாட்கள் கழித்து கேணிக்கரை காவல்நிலையத்தில் புகார்மனு கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

**மறுவிசாரணை- இல்லை**

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2**

**இராமநாதபுரம்**